செ.வெ.எண்: 20 நாள்:19.08.2020

# பத்திரிக்கைச் செய்தி

மத்திய / மாநில அரசு பணிகளுக்கான பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் கிராமப்புற மற்றும் நகர்புற மாணவர்கள் வீட்டிலிருந்தவாறே பயிற்சிபெறும் பொருட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் பிரத்யேக இணையதளமான https://tamilnaducareerservices.tn.gov.in என்ற இணையதளத்தில் மின்னணு பாடக்குறிப்புகள், மாதிரி வினாத்தாள்கள் மற்றும் மாதிரி தேர்வுகள் ஆகியன பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. எனவே மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் அனைத்து மாணவர்களும் தங்களது விவரங்களை பதிவேற்றம் செய்து பயன்பெறலாம்.

அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் மூலம் மத்திய / மாநில அரசால் அறிவிக்கப்படும் பல்வேறு பணிக்காலியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பாரத மாநில வங்கிக்கான 4000-க்கும் மேற்பட்ட Circle Based Officers பணிக்காலியிடங்களுக்கான எழுத்து தேர்வினை எதிர்கொள்ளுவதற்கு ஏதுவாக அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தின் வாயிலாக இலவச இணையவழி பயிற்சி வகுப்பு (Online Class) 20.08.2020 முதல் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் அரியலூர் மாவட்டத்தினை சார்ந்த இளநிலை பட்டப்படிப்பு தேர்ச்சிபெற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் https://bank.sbi/careers அல்லது https://www.sbi.co.in/careers என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து அதற்கான நகலுடன் அரியலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையத்தின் 9994171306 மற்றும் 8072102477 ஆகிய வாட்ஸ்அப் (Whatsapp) எண்களை தொடர்பு கொண்டு இலவச இணையவழி பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**